# உத்தம வாழ்வு



ஓர் ஊரில் பெருந்தன்மையுள்ள செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் சிவைக்கியர். அவருக்கு ஒரேயொரு புத்திரன் இருந்தான். அதனால் தந்தைக்கு மகன் மீது அதிக பிரியம். அதனால் மகனை அதிகம் கண்டிப்பதில்லை. அச்சிறுவன் துஷ்ட்டப் பிள்ளைகளோடு சேர்ந்ததனால் தீய பழக்கங்களை பழகிவிட்டான். அதனால் சிவைக்கியருக்கு மிக்க மனவருத்தம். சிறுவனுக்குப் பத்து வயது ஆகிவிட்டது. அவனைத் திருத்துவதற்குக் கடவுள் வழிபாடே நல்ல வழியென்று நினைத்துத் தான் கோயிலுக்குப் போகும்போது தன்னுடன் வரவேண்டுமென்று மகனிடம் கூறினார்.





S. S. P. C. 120288

சிறுவன் ஒன்றும் பேசாமல் நின்றான். அப்போது சிவைக்கியர், "என்ன மகனே, நாங்கள் மிருகங்களா? மிருகங்கள் உணவு தேடுவதிலும், உண்பதிலும், உலாவித் திரிவதிலும், உறங்குவதிலும் காலத்தைப் போக்குவன; நீயும் அவற்றைப் போலத்தான் காலத்தைப் போக்க எண்ணுகின்றாயா? இந்த அருமையான மனிதப் பிறவி நமக்குக் கிடைத்தது. நாம் கடவுளை வணங்கி, அவரிலே பற்று வைத்து அவரோடு சேருவதற்காகவே; ஆதலால், உத்தமனாக வாழ்ந்து கடவுளை வழிபடல் வேண்டும். தினந்தோறும் காலையிலும் மாலையிலும் பத்து நிமிட நேரமேனும் கடவுள் வழிபாட்டிலே ஈடுபடலாகாதோ? கோயிலுக்குப் போவதுமன்றிக் காலையிலும், மாலையிலும் முகங் கழுவியவுடனே திருநீறு பூசித் தோத்திரஞ் சொல்லிக் கடவுளை வணங்குதல் வேண்டும்" என்றார். சிறுவனும் அரைகுறை மனதோடு சம்மதித்தான்.



மகனின் மனோநிலையைக் கருத்திற் கொண்டு, அவன் கோயிலுக்கு விருப்பத்தோடு போகச் செய்வதற்காக, கோயிற் குருக்களிடத்திலே சிவைக்கியர் இரகசியமாக ஓர் ஒழுங்கினைச் செய்து வைத்தார். அன்று பின்னேரம், சிவைக்கியரும் மகனுங் கோயிலுக்குச் சென்றார்கள். அவர்கள் கும்பிட்டு முடிந்த பின்பு, குருக்கள் அவர்களுக்குத் திருநீறு கொடுத்துச்

சிறுவனிடம் வாழைப்பழமுஞ் சர்க்கரைப் பொங்கலுங் கொடுத்தார். சிறுவன் மிகவுஞ் சந்தோஷப்பட்டுக் கொண்டான். கோயிலிலிருந்து வீட்டுக்குச் செல்லும் வழியிலே தனக்கு ஒவ்வொரு நாளுங் குருக்கள் வாழைப்பழமுஞ் சர்க்கரைப் பொங்கலுங் கொடுப்பாரா என்று தகப்பனாரைக் கேட்டான். அதற்குச் சிவைக்கியர், "நாளைக்கு நாங்கள் கோயிலுக்குப் போகிறபொழுது குருக்கள் தருகிறாரா என்று பார்க்கலாமே" என்றார். அடுத்த நாள், சிறுவன் கோயிலுக்குப் போய்ச் சுவாமியைக் கும்பிட்டு விட்டு நின்றான். குருக்கள் பிரசாதத்தைக் கொடுத்தார். அவன் தனக்கு ஒவ்வொரு நாளும் பிரசாதங் கிடைக்குமென்று எண்ணிக் கோயிலுக்கு ஒழுங்காகப் போனான். கெட்ட சினேகிதர்களின் சகவாசத்தைக் குறைத்து, சிவைக்கியர் மகனை இயன்ற வரையுந் தம்மோடு வைத்துக் கொண்டு அவனை நல்ல பிள்ளை ஆக்கினார்.

பலநாட் சென்ற பின்பு, ஒரு நாட் சிறுவன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து தகப்பனாரைப் பார்த்து, "அப்பா, பிறருடைய பொருளை நாம் அனுபவிப்பது தான் எல்லாச் செய்கைகளிலும் மிக இழிவான செய்கை" என்றான். "இதை உனக்கு யார் சொன்னது?" என்று மகனிடம் சிவைக்கியர் கேட்டார். "இன்று பாடசாலையில் நான் படித்துக் கொண்ட பாடம் இது" என்றான் சிறுவன். "குருக்களிடமிருந்து வாழைப்பழம் வாங்க எனக்குப் பிரியமில்லை" என்று சிறுவன் கூறினான். "மகனே, நீ சொல்லுவது சரிதான். ஆனாலும் பிரசாதம் கிடைக்கவில்லை என்றால் நீ கோயிலுக்குப் போகமாட்டாயே" என்றார். அப்போது மகன், "அப்பா, நான் பிரசாதத்துக் காகவா கோயிலுக்குப் போகிறேன்? தொடக்கத்திலே நான் போனது அதற்காகவுந்தான்; இப்போது அதைப் பற்றி நான் சற்றேனும் நினைக்க வில்லை. கடவுள் எங்கள் எல்லோருக்கும் தாயும் தகப்பனுமாய் இருந்து எங்களிலே மிகுந்த அன்பு வைத்து எங்களைக் காக்கின்றாரல்லாவா? நான் உங்களிலே எவ்வளவு பற்றாக இருக்கிறேன்; அப்படித்தானே கடவுளிலும் பற்றாக இருப்பேன். அவர் அருள் இல்லாவிட்டால் ஒரு நிமிடமாவது நாம் இருக்க முடியுமா? எந்தக் காலத்திலும் எந்தப் பிறவி எடுத்தாலும் அவர் தாமே எம்மைக் காக்கின்றவர். இனிமேல் ஒரு நாளைக்காவது கோயிலுக்குப் போகாமல் இருக்க மாட்டேன்" என்றான்.

சிவைக்கியர் இதைக்கேட்டு மிகவும் மகிழ்வடைந்தார். "மகனே, நீ இப்போது மிகவும் உத்தமமான பிள்ளையாகி விட்டாய். இனி உனக்கு ஒரு குறையுமில்லை" என்று மகனை வாழ்த்தினார்.

சிறுவன் பக்தியும் புத்தியும் உள்ளவனாக வாழ்ந்தான். கடவுளை வணங்கி வந்தால் எந்தத் தீமையும் அணுகாது.

**இறைசிந்தனை நிறைவினைத் தரும்.**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) செல்வந்தரின் பெயர் யாது?
(2) அவருடைய மகன் தீய பழக்கங்கள் பழகக் காரணமென்ன?
(3) உணவு தேடுவதிலும் உண்பதிலும் மட்டும் காலத்தைக் கழிப்பன எவை?
(4) சிறுவன் குருக்களிடமிருந்து வாழைப்பழம் வாங்கப் பிரியமில்லை எனக் கூறியது ஏன்?
(5) சிறுவன் முதலில் எதற்காகக் கோயிலுக்குப் போகத் தொடங்கினான்?
(6) கடவுள் எப்படிப்பட்டவர் என்பதற்குச் சிறுவன் கூறும் கருத்துக்கள் யாவை?

## செயற்பாடு

* வெள்ளிக்கிழமைகளில் பாடசாலையில் அல்லது அயலிலுள்ள கோயிலுக்குச் சென்று பூசையிற் கலந்து கொள்ளுங்கள்.
* "ஆலய வழிபாடு" பற்றி மாணவர் மன்றத்தில் உரை நிகழ்த்துங்கள்.